iv. ஆனந்த தாண்டவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுவர்.

## பகுதி II

O1.

i. **மிஸ்ர அலாரிப்பினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.**

அலாரிப்பு

தாளம் - மிஸ்ரசாபு இராகம் - நாட்டை

| | | | |
|---|---|---|---|
| த ,கி ,ட , | = | த ,க , | தி ,மி , // |
| தா : : | = | தெய் , : | தெய் ,யும் , // |
| தா : த , | = | தாம் : | கிடதக // |
| த , தெய் , : | = | யா : | தெய் ,யும் , // |
| தா : த , | = | தாம் : | கிடதக // |
| தாம் : : | = | : : | தி , : // |
| தாம் : : | = | : : | கிடதக // |
| தெய் , : : | = | : : | த , : // |
| தெய் , : : | = | : : | கிடதக // |
| தாம் : : | = | தாம் : | கிடதக // |
| தெய் , : , த | = | தெய் , : | கிடதக // |
| தாம் , திதாம் | = | : தரி | கிடதக // |
| தெய் : ததெய் , | = | : தரி | கிடதக // |
| தாரித கிண | = | ஜெம் , : | ததரித // |
| கிண ஜெம் , : | = | தகும்தரி | கிடதக // |
| தக ததிங்கிண | = | தொம் , : | தக ததிங் // |
| கிணதொம் , : | = | தக ததிங் | கிணதொம் , // |
| துருகிடு தக தக | = | துருகிடு தக | துருகிடு தக // |
| துருகிடு தக தக | = | துருகிடு தக | துருகிடு தக // |
| துருகிடு தக தக | = | துருகிடு தக | துருகிடு தக // |
| தளாங்கு தக | = | தக ததிங் | கிணதொம் , // |
| தா : : | = | தெய் , : தெய் ,யும் , // | |
| தா : த , | = | தாம் : | கிடதக // |
| தாம் : : | = | : : | : : // |

(O8 புள்ளிகள்)

ii. நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றினைக் குறிப்பிட்டு அதன் அனுபல்லவிப் பகுதியில் அமைந்த முதலாவது தீர்மானத்தினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

## பதவர்ணம்

**இராகம் - பூர்விகல்யாணி** **தாளம் - ஆதி**

| | | |
|---|---|---|
| தத், தக், க, தி, தாகத ஜெம், தரி தா ; ; | | |
| கிடதக தத், தளாங்கு தக / | தக தக், க, தி, தாகத ஜெம், தரி / | தெய், ; ; கிடதக தத், |
| | | தளாங்கு தக // |
| தத், தக், க, தி, கிடதக தத், தளாங்கு | | |
| தக தக், க, தி, கிடதக தத், தளாங்கு / | தத், தக், க, தி, கிடதக தத், | |
| | தளாங்கு / | தக தக், க, தி, கிடதக தத், |
| | | தளாங்கு // |
| கிடதக தத், தளாங்கு கிடதக தத், தளாங்கு | | |
| கிடதக தத், தளாங்கு கிடதக தத், தளாங்கு / | தளாங்கு தளாங்கு | |
| | தளாங்கு தளாங்கு / | தளாங்கு தத், தகதிகு |
| | | கிடதகதரிகிட தொம், // |
| தளாங்கு தளாங்கு தளாங்கு தளாங்கு | | |
| தளாங்கு தத், தகதிகு கிடதகதரிகிடதொம் , / | தளாங்கு தளாங்கு | |
| | தளாங்கு தளாங்கு / | தளாங்கு தத், தகதிகு |
| | | கிடதகதரிகிடதொம் ,// |

# பதவர்ணம்

**இராகம் - ஆனந்த பைரவி** **தாளம் - ஆதி**

| | | |
|---|---|---|
| வாடி / | இ / | ங் தளாங்கு தகதிகு // |
| தக ததிங்கிணதொம் , தீனுத்த தத் , | | |
| திமி தாகத ஜெம் , ததஜெம் ; தஜெம் ; த / | ரும் ; கதிம் , தக | |
| | தீனுத்ததத் , திமி / | தாகத ஜெம் , ததஜெம் ; தஜெம் ; த // |
| ரும் ; கதிம்,தக | | |
| தீனு திமித தக திமித கிடத தக கிடத தகத தக / | திகு தக தத் , தித் , தத் , | |
| | கிடதகதரிகிடதொம் , / | தக தத் , தித் , தத் , |
| | | கிடதகதரிகிடதொம் ,தக // |
| தத் , தித் , தத் , கிடதகதரிகிடதொம் , | | |
| த , க , தா , தணா தா , தணா தா , த / | ணா அழைத் / | தோடி // |
| ; வாடி / | இ / | ங்கே // |

(12 புள்ளிகள்)

**02. i. ஒடிசி நடனத்தின் தோற்றம் பற்றிச் சுருக்கமாகத் தருக.**

- ஒடிசி நடனமானது ஒரிஸா மாநிலத்திற்குரியதாகும்.
- இந்நடனம் இந்திய செவ்வியல் பத்ததிகளில் மிகவும் பழமையானது.
- கி.மு 2ம் நூற்றாண்டிற்கு முன் தோன்றிய ஒரிஸாவில் உள்ள குகைகளே இதற்கு சாட்சி.
- ஒரிஸாவின் சில இன மக்களின் பழைய நாடோடி நடன மரபுகளில் தோடிபுபா மரபு, படைக்கல மரபு, மகரி மரபு போன்றன குறிப்பிடத்தக்கன.

(3 புள்ளிகள்)

**ii. ஒடிசி நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் இசை, இசைக்கருவிகள் என்பன பற்றிக் குறிப்பிடுக.**

**இசை**

- இந்துஸ்தானி இசை, கர்நாடக இசைகளின் மரபு வழி நட்டுவாங்கத்தாளமும், வாய்ப்பாட்டும் கையாளப்படுகிறது.

**இசைக்கருவிகள்**

- புல்லாங்குழல்
- கினி என்னும் மத்தளத் தாளக்கருவி
- சாரங்கி அல்லது வயலின்
- வீணை
- மேளம்
- கொம்பு போன்ற கருவிகள்.

(3 புள்ளிகள்)

**iii. ஒடிசி நடனத்தின் ஆடை, அணிகலன்கள் என்பன பற்றி விவரிக்குக.**

**ஆடை**

- பரதநாட்டியத்தைப் போன்றது.
- புடவையால் கட்டப்பெறும் இந்த ஆடை மராட்டிய மகளிர் கட்டும் பஞ்சகத்தைப் போன்றது.
- பரதநாட்டிய உடையின் முன்பக்கத்தில் காணப்பெறும் விசிறி மடிப்பு இதில் காணப்படுவதில்லை.
- பட்டுச்சாரி அல்லது 9 கஜ பட்டுப்புடவை, கவர்ச்சியான நிறங்களில் கான்ச்சுலா அல்லது சரியான அளவில் தைக்கப்பட்ட ரவிக்கை, செயற்கை வண்ணக்கற்கள் வைத்துத் தைககப்பட்டவை.
- நிபின்தா எனும் இடுப்பைச் சுற்றிச் சுருக்கங்கள் நிறைந்து தைக்கப்பட்ட மேலாடை.
- ஜோபா அல்லது நீளமான கயிறு, இருபக்க முனைகளிலும் குஞ்சத்துடன் இடுப்பைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும்.

(2 புள்ளிகள்)

**அணிகலன்கள்**

- தலையலங்காரம் மிகவும் வேலைப்பாடு வாய்ந்த கொண்டையும் தலையணி கிரீடத்தைப் போன்றதும் மல்லிகை மலர் சுற்றப்பட்டதாகவும் இருக்கும்.
- இடையில் சலங்கை கட்டி ஆடுவார்கள்
- தலை முதல் இடுப்பு வரை வெள்ளி ஆபரணங்களையே பயன்படுத்துவர்.
- 'டிக்கா' என்னும் வெள்ளி நெற்றிச் சுட்டியை அணிந்திருப்பர்.
- இதிலிருந்து பிரியும் அலங்காரமாக வெள்ளிச்சங்கிலிகள் காதுப் பகுதி வரை அலங்கரிக்கும்.
- கொண்டைக்குப் பின் பெரிய வெள்ளிச் சிகை வேலைப்பாடமைந்த ஊசி அல்லது பிறைச்சந்திரன் போன்ற வெள்ளி ஆபரணமும் தலையை அலங்கரிக்கும்.
- காதணிகள் காது முழுமையும் மறைக்கும் அளவு மயில் அல்லது பல வடிவங்களில் மணி வடிவ ஜிமிக்கிகளுடன் இருக்கும்.
- இரண்டு, மூன்று நெக்லஸ்களையும் வெள்ளியிலான வங்கிகளையும் நடனமணிகள் அணிந்திருப்பர்.

(2புள்ளிகள்)

iv. **ஒடிசி நடனத்தின் ஆட்ட முறைகள் பற்றி விளக்குக.**

- ஆறு வகை நர்த்தனம் செய்யப்படுகிறது.
- நிருத்தத்தில் இமை, தலை, கால்களின் அசைவு உண்டு.
- திரிபங்க நிலை காணப்படும்.
- தலை ஒரு பக்கம், தோளில் இருந்து இடுப்பு வரை ஒரு பக்கம். இடுப்பில் இருந்து பாதம் வரை ஒரு பக்கம் வளைவு கொண்டு ஆடப்படும்.
- நாட்டியத்தின் ஆரம்பத்தில் பூமிப்ராணாமம் பூமியை வணங்குவதான நடனம், கணேசரைத் துதிப்பதற்கான விக்னேஸ்வரப் பூஜை, சிவனது அவதாரத்தில் ஒன்றைப் போற்றி நிருத்தியம் இதில் அங்க அசைவு, கரணங்கள் காணப்படும்.
- இஷ்ட தேவதா வந்தனம் தொடங்கும்.
- இதில் ஸ்லோகம் பாடி பாவ பூர்வ அபிநயம் செய்யப்படும்.
- ஸ்வர பல்லவி நிருத்தியத்தில் இசை, தாளக்கட்டு மற்றும் சொற்கட்டுக்களுக்கேற்ப அங்க அசைவுகளுடன் நிருத்தம் செய்யப்படும்.
- சிருங்கார ரசத்தைக் கொண்டு சாபிநய நிருத்தியம் செய்யப்படும்.
- ராதை, கிருஷ்ணனின் காதலைச் சித்தரிக்கும் பாடல் கடைசியாக மோட்ச நடனம் என்னும் தரிஜம் அல்லது நதங்கி என்ற நடனம் ஆடப்படும்.

(5 புள்ளிகள்)

V. **ஒடிசி நடனம் வளர்ச்சியடைந்த விதம் பற்றி விளக்குக.**

- கி.பி 6ம் நூற்றாண்டு தொடங்கி நடனம் வழிபாட்டில் ஒரு அங்கம் வகித்தது.
- இந்த நடன வழிபாட்டு முறை புவனேஸ்வரியில் உள்ள ஆலயங்களில் உள்ள சிற்பக்கலைகளுக்கு வழிவகுத்தது எனலாம்.
- சோடகன் தேவர் என்னும் அரசன் கி.பி 11நூற்றாண்டு - கி.பி 12 நூற்றாண்டு இடைப்பட்ட காலத்தில் ஜகநாதர் ஆலயத்தைக் கட்டினான்.
- ஜகநாதர் வழிபாட்டின் போதுதான் நடனம் ஒரு அங்கமாயிற்று என்று "மண்டல பஞ்சி" என்ற கால ஏடுகளில் இருந்து தெளிவாகின்றது.
- கி.பி 15ம் நூற்றாண்டில் இருந்து நடனம் கலைச் செயலாகிவிட்டது. சுவர் ஓவியங்கள், பிரதி விளக்கங்கள் செய்வதிலும் ஈடுபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதிலிருந்து தனித்தன்மையான நடனக்கலைஞனின் அனுபவம் வெளிப்படுகிறது.
- ஒரிஸாவின் நடனச் சிற்பச் சொத்தாக கொனராக் ஆலயம் தோன்றியது.
- வழிபாட்டில் உறுதியில் நாட்டியத்திற்கு தரப்படும் வாய்ப்பு நேரம், சடங்கு முறைகள் பற்றி மதல் பஞ்சியினூடாக அறிய முடிகிறது.
- ஒரிஸாவின் ஆலயங்களிலும் அரசவைகளிலும் நாட்டியம் முக்கிய செயற்பாடாக இருந்தது.
- ஆலய நர்த்தகிகளை "பீதர் காலநியர்கள்" என்றும் அரசவையில் ஆடியோரை "பாஹறர் காவன்யர்" எனவும் குறிப்பிட்டுள்ளனர்.
- பெண் வேடம் பூண்ட நாட்டியச் சிறுவர்கள் ஆலயத்திற்கு வெளியே ஆடி வந்தார்கள்.
- இந்த மரபு கி.பி 19ம் நூற்றாண்டிலிருந்து கி.பி 20ம் நூற்றாண்டு ஆரம்பம் வரை தொடர்ந்திருந்தது.

(5 புள்ளிகள்)

**03.**

i. **சிருங்கார ரஸத்தின் ஸ்தாயி பாவம், இறைவன், நிறம், எதிர்ரஸம் என்பவற்றைத் தருக.**

- ஸ்தாயி - ரதி / ரதிர்
- இறைவன் - மகாவிஷ்ணு
- நிறம் - கருநீலம்
- எதிர் ரஸம் - பீபத்ஸம்

(2 புள்ளிகள்)

ii. **சிருங்கார ரஸத்தின் வகைகளைக் குறிப்பிடுக.**

1. அயோக சிருங்காரம்
2. விப்ரயோக சிருங்காரம் அல்லது விப்ரலம்ப சிருங்காரம்
3. சம்போக சிருங்காரம்

(3 புள்ளிகள்)

iii. **மேலே (ii) இல் குறிப்பிட்ட சிருங்கார ரஸத்தின் வகைகளை விரிவாக விளக்குக.**

- அயோக சிருங்காரம்

  ஒருவரை ஒருவர் முன்பு நேரில் காணாமல் காதலிப்பது அதாவது கனவில் கண்டு காதலித்தல். இல்லாவிடில் சகி மூலம் நாயகனைப்பற்றிய நல்ல கதைகளை அதாவது நாயகனது அழகு, வீரம், நற்பண்புகள், நற்செயல்கள் ஆகியவற்றைக் கேட்டுக் காதலித்தல் அல்லது நாயகனின் படத்தைப் பார்த்துக் காதலித்தல் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொண்டு காதலித்தல் ஆகியவையாகும்.

  உதாரணம் - பக்த மீரா
- அயோக சிருங்காரத்தில் பத்து நிலைமைகள் காணப்படுகின்றன. அவை அபிலாஷா, சிந்தா, ஸ்மிருதி, குணதா, உத்வேக, பிரலாபம், உன்மாதம், ஜீவரம், ஜடதா. மரணம் என்பனவாகும்.

(4 புள்ளிகள்)

2. விப்ரயோக சிருங்காரம் அல்லது விப்ரலம்ப சிருங்காரம்

- சேர்ந்த இருவரின் பிரிவே விப்ரயோகம் எனப்படும். பிரிவினால் ஏற்படும் துயரம், இந்தப் பிரிவானது சாபத்தால் உண்டானதாகவோ அல்லது வேலை நிமித்தமாகப் பிற ஊர் செல்ல வேண்டியதால் ஏற்பட்டதாகவோ இருக்கும். அல்லது நாயகனும் நாயகியும் சண்டை போட்டதனால் ஏற்பட்ட பிரிவாகவும் இருக்கலாம்.

  உதாரணம் - சாபத்தினால் ஏற்பட்ட பிரிவு (துஷ்யந்தன்,சகுந்தலை பிரிவு)
- இவ்விப்ரயோக சிருங்காரத்தில் பத்து அவஸ்தைகள் உண்டு. அவை ஒருவரை ஒருவர் பார்க்க விரும்புவது, எப்படி ஒருவரை ஒருவர் சந்திக்க முடியும் என்பதையும் அதனால் ஏற்படக் கூடிய நன்மைகளையும் பற்றிய ஆழ்ந்த நினைவு கூரல். நடந்து கொண்ட முறைகளையும் தத்தமது செய்கைகளையும் ஞாபகப்படுத்திக் கொள்ளல். ஒருவருடைய குணாதிசயங்களை இன்னொருவர் வர்ணித்தல், ஆசை மேலீட்டால் மற்ற யாவற்றிலும் வெறுப்படைதல், வருத்தம், துக்கம், பிரிவு முதலியவற்றைப் பிரதிபலிக்கும் வார்த்தை, நடத்தை, கண்ணீர், பெருமூச்சு, அழுகை, மனவருத்தத்தாலும் எண்ணம் நிறைவேறாததாலும்

உண்டாகும். பைத்தியம் இதே காரணத்தால் நேரும் வியாதி. விரகத்தாலுண்டான வருத்தத்திற்கு அடையாளமாக அவர்கள் படும் கொடிய துன்பம் முடிவான நிலைமை என்பனவாம்.

- விப்ரலம்ப சிருங்காரமானது பின்வரும் வியபிசாரி பாவங்கள் மூலம் மேடையில் பிரதிபலித்துக் காணப்படல் வேண்டும். அவை மனச் சோர்வு, ஏக்கம், சக்தியின்மை, பலஹீனம், பயம், பொறாமை, ஆபாசம், ஆவல், நித்திரை, சோம்பல், கனவு, பொய்க்கோபம், நோய், பைத்தியம், மறதி, மரணம், என்பனவாம். (4 புள்ளிகள்)

3. சம்போக சிருங்காரம்

- காதலனும் காதலியும் ஒன்று கூடுவதனால் ஏற்படும் இன்பம். காதலனும் காதலியும் ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொண்டு சந்தோஷமாய் இருத்தல். சம்போக சிருங்காரத்ததில் நாயகி நாயகன் பால் கொண்டிருக்கும் அன்பு, சாந்தம், பக்தி, என்பவற்றிற்கேற்ப அவளின் நளினமான பத்து செய்கைகள் சம்பவிக்கின்றன. அவை லீலா, விலாஸ, விச்சிப்தி, விப்பிரகம், கிலகிஞ்சித, மோட்டாயிதம், குட்டமிதம், விபோகம், லோலிதம், விக்ருதம் என்பனவாகும். (4 புள்ளிகள்)

1. லீலா

   ஒரு பெண்ணின் செய்கைகளால் காதலர்கள் போல் நடித்தல் லீலா எனப்படும்.

2. விலாச

   காதலனைக் கண்டவுடனே தோற்றத்திலும் செய்கைகளிலும் ஏற்படும் மகிழ்ச்சிகரமான திடீர மாற்றம் விலாச எனப்படும்.

3. விச்சிப்தி

   தனது அழகை அதிகரிப்பதற்காக ஆபரணங்களை சிறிதளவு மாற்றி அணிதல்

4. விப்பிரகம்

   சில சமயங்களில் அவசரத்தில் ஆபரணங்களை இடம் மாற்றி வைத்தல் விப்ரகம் எனப்படும்.

5. கிலகிஞ்சித

   கோபம், சந்தோசம், பயம் ஆகிய உணர்ச்சிகளின் சேர்க்கையினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியாகும்.

6. மோட்டாயிதம்

   காதலனைப் பற்றியக் குறிப்பிடுகையில் காதலனுடைய எண்ணத்தில் லயித்தல் மோட்டாயிதம் எனப்படும்.

7. குட்டமிதம்(போலிக் கோபம்)

   நாயகன் நாயகியின் கூநடதலை அல்லது உதடுகளை ஸ்பரிசிக்கும் பொழுது உள்ளூர மகிழ்ச்சியினால் மனம் நிறைந்திருந்தாலும் பொய்க் கோபம் காண்பித்தல்.

8. விபோகம் (தாக்கப்பட்ட அலட்சியம்)

   காலத்தால் ஏற்படும் இறுமாப்பினால் காதலன்பால் புறக்கணிக்கப்பட்ட ஒழுக்கம்.

9. லோலிதம்

   பெண்பாலாரின் அழகிய சிருங்கார நிலை லோலிதம் எனப்படும்.

10. விக்ருதம் (நாணம்)

   நாயகனோடு பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தும் ஒழுக்கம் காரணமாக மௌனமாக இருத்தல் விக்ருதம் என்றழைக்கப்படும்.

(3 புள்ளிகள்)

**04. கண்டிய நடனத்தில் இடம்பெறும் சாஸ்திரிய உருப்படிகள் இரண்டினைக் குறிப்பிட்டு, பதினெட்டு வகையான வண்ணங்கள் பற்றி விவரிக்குக.**

- கண்டிய நடனத்தில் இடம்பெறும் சாஸ்திரிய உருப்படிகள்
  வண்ணம்
  வெஸ்
  நையாண்டி
  உடக்கி
  பந்தேரு ஆகியனவாகும்.

(2 புள்ளிகள்)

பதினெட்டுவகை வண்ணங்கள்

1. கஜக வண்ணம்:-
   யானை ஒன்று நீர்த்தொட்டியில் குளிக்கும் போது அதன் நளின, லாவண்ய, கம்பீர விளையாட்டு அசைவுகளை வர்ணித்து ஆடுவதாக அமைகிறது.

2. அநுமான் வண்ணம்:-
   குரங்கின் சேட்டைகளையும், அசைவுகளையும் பிரதிபலிக்கும் முகமாக அமைகிறது.

3. மயூர வண்ணம்:-
   கதிர்காமக் கந்தனது மயிலூர்தியை வர்ணித்து ஆடப்படுவதாகும்.

4. உதாரற வண்ணம்:-
   அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் 64 வகையான அணிகலன்களை அணிந்தவாறு பட்டத்து யானை மீது மங்கள வாத்தியங்கள் முழங்க உலா வருவதைப் பிரதிபலித்துக் காட்டுகிறது.

5. சவுளா வண்ணம்:-
   'சவுளா' என்பது சிங்கள மொழியில் சேவலைக் குறிக்கும் சொல். தேவசுர யுத்தத்தில் முருகன் தோன்றி சூரனை வதம் செய்யும் போது சேவலும் மயிலுமாகிய கதையைச் சித்தரிக்கின்றது. இந்நடனம் சேவலைப் பற்றி மட்டுமே வர்ணிக்கின்றது.

6. வைரோடி வண்ணம்:-
   சிவலோகத்தைக் குறித்து ஆடப்படும் நடனமாக விளங்குகிறது.

7. நையடி வண்ணம்:-
   குறி ஜாதகக் கதையிலிருந்து தெரிவு செய்யப்பட்டது. நாக சமூகத்தில் அரச குமரனாகப் பிறந்த போதிசர்வர் அரச பதவியைத் துறந்து, பாம்பின் உருவினைப் பெற்றார். பாம்பாட்டி அப்பாம்பினைப்பிடித்து வந்து தனது மகுடியின் நாதத்திற்கேற்ப ஆட்டுவித்தான் என அறியக் கூடியதாய் உள்ளது. இந்நடனம் பாம்பின் அசைவுகளைப் பிரதிபலிப்பதைக் கருவூலமாய்க் கொண்டது. " சர்ப்பஸீர்ஸ்" முத்திரை பயன்படுத்தப்படுகிறது.

8. சிங்கராஜ வண்ணம்:-
   சிங்கமானது ஆமையால் ஏமாற்றப்பட்டு கிணற்றுக்குள் தள்ளிவிடப்பட்ட கதையினைச் சித்தரிக்கின்றது.

9. துரக வண்ணம்:-
சித்தார்த்தனின் கண்டக எனும் குதிரை எவ்வாறு ஆற்றைக் கடந்து சென்றது என்பதைச் சித்தரிக்கின்றது.

10. அஸத்ருஸ வண்ணம்:-
கௌதம புத்தரைப் போற்றிப் புகழ்ந்து ஆடப்படும்.

11. ஈரடி வண்ணம்:-
ஒரு போர் வீரனின் வீரதீர பராக்கிரமச் செயல்கள் யாவும் நடனத்தின் மூலம் வெளிக்காட்டப்படுகிறது.

12. ஸுரபதி வண்ணம்:-
தேவர்களின் தலைவனான இந்திரனைப் போற்றும் தெய்வத் தன்மை பொருந்தியது.

13. காஹக வண்ணம்:-
சங்கினைப் பற்றிய வர்ணனைகள் இதில் இடம் பெறுகின்றன.

14. உக்குஸா வண்ணம்:-
பருந்துகள் காற்றிலே மிதந்து வருவது போல காணப்படும் நிகழ்வினை நடனம் மூலம் காட்சிப்படுத்தல்.

15. உரக வண்ணம்:-
சிலர் அதனை நாக வண்ணம் என்றும் அழைப்பர். நாகபாம்பின் வாழ்க்கையைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளது.

16. முசலடி வண்ணம்:-
முயலின் பாய்ச்சலின் வேகத்தையும் பயந்த சுபாவத்தையும் காட்டுகிறது.

17. கிரளா வண்ணம்:-
கிரளா என்னும் பறவையின் ஒலியையும் அசைவுகளையும் இந்நடனம் பிரதிபலிக்கின்றது.

18. கணபதி வண்ணம்:-
விநாயகக் கடவுளைக் குறித்து அவரைப் போற்றிப் புகழ்ந்து அவரின் அருளை வேண்டி ஆடப்படுவதாகும்.

(18 புள்ளிகள்)

**05. i. சோழர் காலக் கல்வெட்டுக்கள் ஆடற்கலைஞர்களைக் குறிப்பிடும் பெயர்களில் மூன்றினைத் தருக.**

- ஆடற் பெண்டிர்
- தளியிலார்
- பதியிலார்
- கூத்திகள்
- தளித்தேவனார் மகளார்
- கூத்தப்பிள்ளைகள்
- தளிச்சேரி பெண்டுகள்
- தேவரடியார்கள்

(3 புள்ளிகள்)

**ii. சோழர் காலத்தில் ஆடப்பட்ட இருவகை அகக் கூத்துக்களையும் குறிப்பிட்டு அவற்றினை விளக்குக.**

- சாந்திக் கூத்து
- விநோதக் கூத்து

**சாந்திக்கூத்து**

- சாந்திக் கூத்து சோழர் காலத்தில் செல்வாக்குப் பெற்ற அகக்கூத்தாகும்.
- சாந்திக் கூத்தின் முதல் பிரிவான சொக்கம் சோழர் காலத்தில் சிறப்பான நிலையை எய்தியது.
- சொக்கத்தில் தேர்ந்தவர்கள் நிருத்தமராயன், நிருத்தவிடயங்கியர் என்றழைக்கப்பட்டனர்.
- சாந்திக்கூத்தின் பிற உட்பிரிவுகளான அகமார்க்கம், அபிநயக்கூத்து நாடகம் என்பன இக்காலத்தில் பரவலாக ஆடப்பட்டது.
- அகமார்க்க நட்டுவம், அபிநய நட்டுவம் என இரு வேறு சிறப்பு நட்டுவ நிலைகள் இருந்ததைத் திருவிடைமருதூர்க் கோயிற் கல்வெட்டு ஒன்று உறுதி செய்கின்றது.
- அகமார்க்கம் திருவொற்றியூரில் பின்பற்றப்பட்டுத் தேவரடியார்கள் அகமார்க்கம் நிகழ்த்தியதை ஆதிபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டு ஒன்று எடுத்துரைக்கின்றது.
- அபிநய நட்டுவம் என்பது சாந்திக் கூத்தின் ஒரு பிரிவான அபிநயக்கூத்தாகும்.

**விநோதக்கூத்து**

- விநோதக்கூத்தின் ஆறு பிரிவுகளில் ஒன்றான குடக்கூத்து தமிழ் நாடெங்கும் ஆடப்பெற்றதைக் கோயில் சிற்பங்கள் உறுதி செய்கின்றன.

(5 புள்ளிகள்)

iii. **சோழர் காலத்தில் ஆடல் நிகழ்த்தப்பட்ட அரங்குகள் பற்றி விவரிக்குக**

- ஆடலும் இசையும் இணைந்து நிகழ்ந்த ஆடல் அரங்குகள், நாட்டிய மண்டபம் என்றும் நிருத்த மண்டபம் என்றும் நாடகசாலை என்றும் நானாவித நாடக சாலை என்றும் பலவேறு பெயர்களால் அழைக்கபட்டதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.
- ஆடற்கலைஞர்கள் ஆடல் பயிலக் கோயில் மண்டபங்களும் உதவின.
- திருவோலக்க மண்டபம், நிருத்த மண்டபம், திருக்காவணம், திருவரங்கு, சதுர்சாலை, நாடகசாலை, அம்பலம் எனப் பல மண்டபங்களில் ஆடல்கள் நிகழ்ந்தன.
- இவற்றுள் அம்பலங்கள் பெரும்பாலும் கோயிலுக்கு வெளியே ஊரகத்தே அமைந்திருக்கின்றன.
- மண்டபங்களைப் போலவே இறையூர்வலங்கள் நிகழ்ந்த திருவீதிகளிலும் ஆடல் நிகழ்ந்தது.
- இவ்வாடல்களில ஆடற்பெண்கள் ஆடிக்கொண்டும், பாடிக் கொண்டும் செல்லக் கோயில் இசைக் கலைஞர்கள் பரவலாய் இருந்து தாளமும் பண்ணும் தந்தனர். சிவபுரம் இராஜராஜேசுவரத்துக் கல்வெட்டும் இதற்குச் சான்று.

(5 புள்ளிகள்)

iv. **தளிர்ச்சேரிக் கல்வெட்டுக்களில் காணப்படும் ஆடற்குறிப்புகள் பற்றி விவரிக்குக.**

- முதலாம் இராசராசனின் தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயிலில் உள்ள 55.78 மீற்றர் நீளமுள்ள மிக நீண்ட கல்வெட்டுக்களுள் ஒன்று இத் திருக்கோவில் சார்ந்திருந்த தளிச்சேரி பற்றிய விரிவான தகவல்களைத் தருகின்றது.
- இத் தளிச்சேரிக் குடியிருப்புக்கள் பெரிய கோயிலின் வடக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் அமைந்திருந்தன.
- இவற்றுள் தெற்கு, வடக்குத் தளிச்சேரிகள் வடசிறகு, தென்சிறகு எனும் இரு பிரிவுகளைக் கொண்டிருந்தன.
- தெற்கு தளிச்சேரி தென் சிறகிலே 92 நடனமாதரும் தெற்கு தளிச்சேரி தென்சிறகிலே 95 நடன மாதரும் வடக்கு தளிச்சேரி வடசிறகிலே 96 நடன மாதரும் மேற்கு தளிச்சேரியில் 25 நடன மாதரும் என 400 பெண்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர்.
- கல்வெட்டு இவர்தம் பெயர்களையும் ஊர்களையும் விரிவாகத் தருகின்றது. எடுத்துக்காட்டு - நக்கன் நீறணி பவளக்குன்றம்" நக்கன் என்றால் நடம் புரியும் சிவனைக் குறிக்கும்.
- இவர்களின் ஆடற் சேவை சிறப்புற,

  "நட்டவஞ் செய்ய நட்டவம் ஒன்றுக்கு
  ஆரையன் சுந்தர சோழனான மும்முடி சோழ
  நிர்த்தய மாராயன்.." (சாசன வரி 401"

  என்றபடி எழுவர் நடனம் கற்றுக் கொடுக்க கோயிலில் நிவந்தம் வழங்கி வைக்கப்பட்டிருந்தனர்.
- கூத்தபேரரையன், மாராயன், நிருத்த பேரரையன், கூத்தரசன், சாக்கைமாராயன், நட்டுவ ஆசான் என்ற பட்டங்களால் இவர்கள் அழைக்கப்பட்டனர்.
- அவர்கள் பெற்றிருந்த காணி கூத்தக்காணி, நட்டுவக் காணி என வழங்கப்பட்டது.
- திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் திருக்கோயிலில் 22 தளியிலார்க்கு ஆடல் கற்றுத்தர, ஆடலாசான் ஒருவன் நியமிக்கப்பட்ட செய்தியும், 60 வேலி நிலத்தின் வருவாயிலிருந்து அவருக்கு ஊதியம் தரப்பட்ட செய்தியும் கல்வெட்டுக்களிலிருந்து தெரிகின்றது.

(7 புள்ளிகள்)

06.

i. **ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாகத் தருக.**

- 1904 ஆம் ஆண்டு மாசி மாதம் 29 ஆம் திகதி திருநீலகண்ட சாஸ்திரிக்கும் திருவையாற்றினைச் சேர்ந்த க்ஷேசக்ஷம்மாளுக்கும் ஆறாவது பிள்ளையாகப் பிறந்தார்.
- இளம் வயதிலே இசையிலே ஈடுபாடுள்ளவராகச் சில வித்வான்களிடம் இசை பயின்றார்.
- இவர் திருவல்லிக்கேணியில் உள்ள லேடிவிஸ்டன் மகளிர் பள்ளியில் கல்வி கற்றார்.
- 1920 ஆம் ஆண்டு தனது பதினாறு வயதில் அவுஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஜி.எஸ் அருண்டேல் என்பவரைத் திருமணம் செய்தார்.
- இளம் பிராயத்திலே பிரம்மஞான சங்கத்துடன் ஈடுபாடு கொண்டு கலாநிதி அன்னி பெசன்றின் சந்திப்பின் பின் கலாநிதி அருண்டேல் பிரம்மஞான சங்கத் தலைவரானார்.
- 1926 ஆம் ஆண்டிலே அவுஸ்திரேலியா சென்று அங்கு ருசிய பலே நடனக்கலைஞரான அன்னபவ்லோவாவினையும், அவரது குழுவினரையும் சந்தித்து இக்குழுவினைச் சேர்ந்த கிளியோநோர்டியிடம் ருக்மிணிதேவி பலே நடனம் கற்றார்.
- 1932 ஆம் ஆண்டு பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணவிகளான ராஜலக்ஷ்மி, ஜீவரத்தினம் சகோதரிகளின் நடன நிகழ்ச்சியைக் கண்டு இரசித்தார்.
- மயிலாப்பூர் கௌரி அம்மாவிடம் சென்று நடனப் பயிற்சியை ஆரம்பித்தார்.
- **ஸரஸி ஜாக்ஷ்லு** என்னும் சப்தத்தை முதலாவது பாடமாகக் கற்றுக் கொண்டார்.
- பின்னர் பந்தணை நல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் பரதநாட்டியத்தை முறைப்படி கற்றுக்கொண்டார்.
- இவரின் பரதநாட்டிய அரங்கேற்றம் 1935 ஆம் ஆண்டு மார்கழி மாதம் அடையாறில் உள்ள ஆலமரத்தின் கீழ் கிட்டத்தட்ட ஆயிரம் சபையோர் முன்னிலையில் நடைபெற்றது.
- உயிர்களிடத்து அன்பு பாராட்டி ஆதரவு வழங்கி வந்தமையால் **பிராணி மித்ரா** என அழைக்கப்பட்டார்.
- 1986 ஆம் ஆண்டு மாசி மாதம் 24ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

(10 புள்ளிகள்)

ii. **அவர் பரத நாட்டியக் கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விளக்குக.**

- தமது நடனக் கச்சேரிகளை சதிர்கச்சேரி என அழையாது பரதநாட்டியக் கச்சேரி என அழைத்தார். இவ்வாறு 'சதிர்', பரதநாட்டியமாயிற்று.
- இவரது முதலாவது பரதநாட்டியக் கச்சேரி எழும்பூர் மியூசியம் தியேட்டரில் திருவாங்கூர் இளையராஜா தலைமையில் நடைபெற்றது.
- ருக்மிணிதேவி அவர்களும் அவரது கணவரும் கலாநிதி ஜேம்ஸ் கஸின்ஸ் போன்ற சில நண்பர்களுடன் சேர்ந்து கலைக்கூடம் ஒன்றை உருவாக்க விரும்பினார்.
- அவ்வாறு அடையாறில் தோற்றுவிக்கப்பட்ட கலைக்கூடம் **சர்வதேசக் கலைக்கழகம்** என அழைக்கப்பட்டது.
- பின்னர் அது கலாக்ஷேத்திரம் என அழைக்கப்பட்டது.
- ராதாஸ்ரீராம் என்பவரை ஒரேயொரு மாணவியாகக் கொண்டு ருக்மிணிதேவி இக்கலைக்கூடத்தினைத் தொடங்கினார்.
- கால் நூற்றாண்டு காலமாக அடையாறில் இயங்கிவந்த கலாக்ஷேத்ரா பின்னர் திருவான்மியூரில் உள்ள

காணியில் கட்டடங்கள் எழுப்பப்பட்டு குடியேறியது.

- மைசூர் மகாராஜாவான ஸ்ரீஜெயசாமராஜவாடியார் இங்கு அடிக்கல் நாட்டினார்.
- 1986 ஆம் ஆண்டு தை மாதத்தில் பாரதப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி அவர்களால் கலாசேத்ராவின் பொன் விழா தொடக்கிவைக்கப்பட்டது. இதற்கு அவர் **சர்வதேசக் கவின்கலைக்கல்லூரி** (International college of fine Arts) என பெயரிட்டார்.
- கடந்த 75 ஆண்டுகளில் இந்நிறுவனத்தில் சுமார் 2000 கலைஞர்கள் பல்வேறு கவின்கலைப் பயிற்சிப் பெற்றுக் கலையுலகிலே மிளிர்ந்தனர் ; மிளிர்கின்றனர்.
- 1934 ஆம் ஆண்டில் பெஸன்ட் தியோஸோபிக்கல் High school ஐ நிறுவுவதற்குத் தமது கணவருக்கு உதவி புரிந்தார்.
- இதன்பின் மொண்டிசேரி பள்ளிக்கூடம், அருண்டேல் ஆசிரிய பயிற்சிகலாசாலை ஆகிய கல்வி ஸ்தாபனங்களை நிறுவினார்.
- 1956 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் வழங்கிய **பத்மபூஷண்** விருது தேசாதிபதியால் இவருக்கு அளிக்கப்பட்டது.
- 1957 ஆம் ஆண்டிலே **முன்னணி நாட்டியமணி** (Foremost dancer) க்கான பரிசை சங்கீதநாடக அக்கடமி வழங்கிற்று.
- 1960 ஆம் ஆண்டு Humanities இல் (Wayne state University U.S.A) டாக்டர் பட்டத்தை அமெரிக்கப் பல்கலைக்கழகம் வழங்கிக் கௌரவித்தது.
- 1969 ஆம் ஆண்டு இவருக்கு இந்தியாவில் உள்ள கல்கத்தா நகரத்தை சார்ந்த ரவீந்திரபாரதி பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியது.
- 1972 ஆம் ஆண்டிலே "தேசிய கோமாதா" என்னும் விருதினை இவருக்கு சாந்தி நிகேதன் விஷ்வ பாரதி பல்கலைக்கழகம் வழங்கிக் கௌரவித்தது.

(10 புள்ளிகள்)

**07.யூரியூப் (You Tube) காணொளியில் பதிவேற்றம் (upload) செய்யப்படும் கலை சார்ந்த ஆற்றுகையைப் பயன்படுத்துதல் கலைகளின் வளர்ச்சியில் எவ்விதம் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை விரிவாக ஆராய்க.**

- சமூக ஊடகத் தளமாகையால் பல கலைஞர்களதும் ஆற்றுகைகளைப் பார்க்கும் போது கற்பனை வளம் அதிகரிக்கும்.
- வேவைப்படும் நேரம் எல்லாம் பார்த்துப் பயன் பெற உதவும்.
- பரதம் மட்டுமன்றி ஏனைய சாஸ்திரிய, கிராமிய நடனங்களையும் காணொளியின் மூலம் பார்ப்பதனால் நீண்ட காலப் பதிவை ஏற்படுத்தும்.
- பதிவேற்றம் செய்யப்பட்ட பாடல்களை பதிவிறக்கம் (Download) செய்து தம் கற்பனையைக் கொண்டு புதிய ஆற்றுகையை வழங்க முடியும்.
- கற்பித்தலின் போது பதிவேற்றிய நிகழ்வுகளைப் பார்வையிடும் போது அவர்களின் ஆர்வம் தூண்டப்படுவதுடன் ரசிக்கும் தன்மையும் ஏற்படும்.
- அரங்க அமைப்புக்கள், ஆடைகளின் வடிவங்கள், வாத்தியப் பயன்பாடுகள் போன்றவற்றைப் பார்ப்பதனூடாகப் புதிய புதிய சிந்தனைகள் உருவாகும்.
- மேலைத்தேய வாத்தியங்களைப் பயன்படுத்தி (Fusion) இணைவு முறையில் ஆற்றுகைப்படுத்தப்படும் கலை நிகழ்வுகள் இன்றைய சந்ததியினருக்கு ரசனையைக் கொடுப்பதால் அவ்வாறான நிகழ்வுகளை ஆற்றுகை செய்யத் தூண்டபபடுகிறார்கள்.
- பதிவேற்றம் செய்ப்படும் நிகழ்வினூடாக சிறந்த நடன ஆசிரியரைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.
- விடயங்களை ஆழமாக அறிந்து கொள்ள முடிகிறது.
- சரி, பிழைகளைப் பகுத்தாராய்ந்து செயற்படும் திறனை பதிவேற்றங்கள் ஒப்பீட்டளவில் குறைக்கின்றன.
- பல கலைஞர்களின் ஆற்றுகைகளைப் பார்த்தும் கேட்டும் அறிவை வளர்த்துக் கொள்ள முடிகிறது.

(20 புள்ளிகள்)

**08. பின்வருவனவற்றிக்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

i. **நாட்டியசாஸ்திரம்**

- வடமொழியில் பரதமுனிவரால் எழுதப்பட்ட பரதநாட்டிய சாஸ்திரத்தைத் தமிழில் திரு.எஸ். என்.ஸ்ரீராமதேசிகன் மொழிபெயத்துள்ளார்.
- இம்மொழிபெயர்ப்பை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 2001 ஆம் ஆண்டு வெளியிட்டது
- மொழிபெயர்பாசிரியர் 6000 சமஸ்கிருத சுலோகங்கள் கொண்டது என்று குறிப்பிட்டுள்ளார்.
- இந்நூல் 36 அத்தியாயங்களை உடையது. சில பதிப்புக்களில் 37 அத்தியாயங்கள் உள்ளன.
- 1 – 27 வரையும் 34 – 36 வரையுமுள்ள அத்தியாயங்களிலே நாடகம், நடனம் முதலியன பற்றியும் 28 – 33 வரை இசை பற்றியும் எடுத்துரைக்கப்படுகின்றன.
- முதல் அத்தியாயத்தில் நாட்டியசாஸ்திரம் தோன்றிய வரலாறு விளக்கப்படுகிறது. நான்கு வேதங்களிலிருந்து வாத்தியம், கீதம், அபிநயம் காப்பியச்சுவை ஆகியவற்றைக் கொண்டு பிரமதேவன் நாட்டியத்தைப் படைத்தான் என்றும், ஐந்தாவது வேதமாகக் கொள்ளப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.
- இரண்டாம் அத்தியாயத்தில் நாட்டிய அரங்குகளும், அவை கட்டப்படும் முறைகளும் நாட்டிய அரங்கின் வடிவ வகைகளும் நாடகத்திற்கு உரிய அரங்கு, நாடியத்திற்கு உரிய அரங்கு எவை என்பனவும் விளக்கப்பட்டுள்ளன.
- மூன்றாம் அத்தியாயத்தில் புதியதாகக் கட்டப்பட்ட அரங்குகள், மன்றங்கள் இவைகளுக்குரிய தெய்வங்களை வழிபடும் முறை தரப்பட்டுள்ளது.
- நான்காம் அத்தியாயத்தில் பிரம்மன் அரங்கேற்றம் செய்த அம்ருத மதனம் எனும் நிருத்திய நாடகம் பற்றியும் அதனைப் பரதர் அரங்கேற்றம் செய்த விதமும் கரண வகை 108 உம் விளக்கி உரைக்கப்பட்டுள்ளன.
- ஐந்தாம் அத்தியாயம் நாட்டியம் நிகழ்த்துவதற்கு முன் அரங்கில் செய்யப்படவேண்டிய செயல்களை விளக்குகிறது.

(5 புள்ளிகள்)

ii. **பயானக ரஸம்**

- இதன் எதிர் ரஸம் வீரம்
- காலனைத் தேவதையாகக் கொண்டது.
- ஸ்தாயி பாவம் பயம்
- ஒருவருக்கு விருப்பமில்லாமத நிகழ்வுகளினால் ஏற்படும் வெறுப்பினால் ஒருவரது உள்ளத்தில் உண்டாகும் மன வேதனைகளின் வெளிப்பாடு.
- இதன் ஆலம்பன விபாவங்கள் இராட்சதன், பேய், பிசாசு, பாம்பு, அடர்ந்த காடு சண்டை, விகாரமான உக்கிரமான சத்தங்கள்.
- உத்தீபன விபாவ செய்கைகள் பயங்கரமான சத்தங்களை செவி மடுத்தல்,ஓநாய்கள் ஊளையிடும் சத்தம், பேய் பூதங்களைக் காணுதல், பூகம்பம், எரிமலை, ஆந்தைகளின் அலறல், வெறுமையான வீடு, காட்டுக்குள் பிரவேசித்தல், மரணம், கொலை, சிறை வாசம்.

- அனுபாவங்கள் கை, கால் நடுக்கம்,கண்களின் அசைவு, ஓடுதல், ஒடுங்குதல்.
- சாத்வீக பாவம் :- ஸ்தம்பம், பிரளயம், கண்ணீர் விடுதல், ரோமாஞ்சம், விர்வை, நிறமாற்றம், குரல் மாற்றம்.
- வியபிசாரி பாவங்கள்:- பயம், சோர்வு, விரக்தி, மனம் குழம்பிய நிலை, அவலம், மூர்ச்சையடைதல், மரணம், மறதி.

(5 புள்ளிகள்)

iii. **ஒளியமைப்பின் நன்மைகள்**

- காண்பிய நிலை அல்லது கட்புலனாகும் நிலையை விளக்குகிறது.
- நடைமுறையில் வெளிச்சத்தை ஏற்படுத்துதல்.
- காலம், இடம், நேரம் ஆகியவற்றை வெளிப்படுத்த உதவும்.
- ஆற்றுகையாளரின் மனநிலையை துல்லியமாகக் காட்டும். (மகிழ்வான மனநிலை – பிரகாசமான ஒளி)
- யதார்த்த மோடி, யதார்த்த மோடி ஆகியவற்றை வெளிப்படுத்த உதவுகிறது.
- பார்வைக் குவிவுகளை வழங்கி ஆற்றுகையைச் சிறப்பிக்கின்றது.
- காண்பிய அசைவில் சீரான நிலையை ஏற்படுத்தும்.

(5 புள்ளிகள்)

iv. **ஆனந்த தாண்டவம்**

- ஐந்தொழில்களையும் ஒருங்கே காட்டும் தாண்டவம்.
- நாதாந்தத் தாண்டவம் எனவும் அழைக்கப்படும்.
- சிதம்பரத்தின் கனக சபையில் தை மாத குரு பூசத் தினத்தில் ஆடப்பட்டது.
- நான்கு கை, மூன்று கண், பொன் நிறம், பிறை, ஊமத்தம் மலர், கங்கை, வலது காதில் மகர குண்டலம், பூநூல், புலித்தோல் ஆடை, கால்களில் கிண்கிணி, வலது கையில் உடுக்கை, இடது கையில் அக்கினி, முயலகன் மீது வலது கால், மேலே தூக்கிய திருவடி கொண்ட திருவுருவம்.
- வலது கை உடுக்கு – படைத்தல் தொழில்
  இடது கை அக்கினி – தீய சக்திகளை அழித்தல்
  வலது அபயகரம் – காத்தல்
  வரத கரம் – அருளல்

(5 புள்ளிகள்)